தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 மேழம் (30-4-1989) ஓர் உருபா (இதழ் எண்: 120)

கலைஞர்க்கு வைத்த குறி பொம்மைக்குப் போனது!

இருப்பினும் கலைஞர்க்கு எச்சரிக்கை இது!

இந்திய அரசின் அமைப்பியல் சட்டத்தின் (Constitution of India) — 356 — ஆவது பிரிவு கீழ்வருமாறு கூறுகிறது:

“அரசியல் அமைப்பியல்படி அரசை நடத்த இயலாத நிலை ஒரு மாநிலத்தில் உருவாகி இருக்கின்றது என்று அந்த மாநில ஆளுநரின் மூலம் அல்லது வேறெந்த வகையாகவேனும் அறிகின்ற குடியரசுத் தலைவர் ஓர் அறிவிப்பின் மூலம், ... அதிகாரங்களைத் தாமே ஏற்றுக் கொள்ளலாம்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஓர் ஆளுநரின் மதிப்பீட்டின் படி, கோடிக் கணக்கான குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் எந்த மாநில அரசையும், குடியரசுத் தலைவர் உடனடியாக, எந்த வகையான முன்னறிவிப்புமின்றிக் கலைக்கலாம்; அதிகாரத்தினின்று அப்புறப் படுத்தலாம்; கீழிறக்கம் செய்யலாம் என்றால், தேர்தல் எதற்கு? மக்களுக்கு ஒப்போலை உரிமைதான் எதற்கு? இந்த அமைப்பிற்குக் குடியரசு என்னும் புனைவான -அழகுப் பெயர்தான் எதற்கு? எதுவுமே தேவையில்லையே!

இஃதெல்லாம் இந்தக் குடியரசமைப்பு உருவான நாளிலிருந்துதான் இருந்து வருகிறது; என்றால், ஆம், நாமெல்லாம் எந்த வகையான, அஃதாவது நமக்குகந்த ஓர் அரசை நாமே உருவாக்கிக் கொள்ளவும் உரிமையற்றவர்களாகத்தான் இருந்து வருகிறோம் என்றுதானே பொருள். இந்தப் பொருள் எல்லாருக்குமே விளங்கும் பொருள்தான். ஆனால், உரிமையற்ற, குடியரசு என்னும் பெயரால் அமைந்த ஓர் அரசின் கீழ்தான் இக்கட்டான நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசியல் வாழ்க்கையில் ஆளும் வல்லதிகார சூழ்ச்சிக்கார இனத்தைத் தவிர, இங்கிருக்கும் யாருக்குமே நம்பிக்கையில்லைதான். இருப்பினும் என் செய்வது? நாம் உரிமைகளை நன்கு உணர்ந்து, மக்கள் பயன் நோக்கி நாம் போராடுகின்ற வரை, நமக்கு வேறு வழி ஏது? விருப்பமில்லாத கொடிய போலிக் கணவனுடன், குமுகாயக் கட்டுப்பாட்டுக்கும் தன் வாழ்வியலுக்கும் அஞ்சிக் குடும்பம் என்னும் பெயரில் சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் ஓர் எளிய ஏழைப் பெண்ணைப் போலவே நாமும் வாழ வேண்டியிருக்கிறது.

இந்த ஓர் அமைப்பியல் சட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள்தான், பல மாநில அரசுகள் இந்தியாவில் ஆட்சி நடத்திக் கொண்டு, ‘நித்தமும் கண்டம்; நிறைந்த வாழ்நாள்’ (நித்திய கண்டம்; பூர்ண

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

மடல் : 9

(இம் மடல்கள் சிறைக்குப் போகுமுன் எங்கோ வழிச்செலவிலிருந்து எழுதிய மடல்களாகத் தெரிகின்றன. இற்றில் காலம், இடம் குறிப்பிடப் பெறவில்லை.)

அன்புருவான அம்மா, பிறை, அக்கா, செந்து, அண்ணன் மற்ற அனைவருக்கும், வணக்கம்.

"புரட்சி என்பது பூக்களைப் பறிப்பதைப் போன்றோ, பூக்களைச் சுற்றுவது போன்றோ — அல்ல." என்கிறார், மாவோ.

பூப்பறிப்பது போன்று எளிமையானதும்,
பூச் சுற்றுவது போன்று ஏமாற்றுவதும் அல்ல — என்பதே அதன் பொருள்.

அப் புரட்சியின் பாதையில் எத்தனையோ உண்மை உயிர்கள் அழிக்கப்படலாம். அல்லது அழிபடலாம். ஆனால் அவை யாவும் விடுதலைப் பயிர்கள் விளைவதற்கான ஊற்றமே அல்லாமல் வேறு அல்ல. நானோ இளைஞர்களோ — இப்படிச் செயல் படுவதற்குத் தாங்கள் வருத்தப் படலாம்; அழலாம். ஆனால் அருள் கூர்ந்து அதற்காக அழ வேண்டாம். நீங்கள் எல்லாரும் அங்ஙனம் செயல்பட வரவில்லையே என்று வருந்துங்கள். அதற்கெனத் தங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

நெல்சன் மாண்டலோவிற்கு வின்னி மாண்டலோ கிடைத்த படியும், மார்க்சுக்கு — ஜென்னி மார்க்சு கிடைத்தபடியும் ஒவ்வொருவரும் உருவாதல் வேண்டும்.

இல்லையெனில் நம் பேச்சு, எழுத்து எல்லாம் போலிமையானவையாகவே இருக்கும்.

ஒவ்வொரு நொடிப் பொழுதையும் பயனுடையதாகவே செலவிடுங்கள். காலம் மிக மிகக் குறைவாகவே உள்ளது. ஓயாமல் நம் வாழ்நாளில் நாம் அனைவரும் உழைத்தால்தான், இத் தமிழ்ப்பெரு நிலத்தின் விடுதலைக்கு நாம் துணையாக இருக்க இயலும். தனி நலத்தைத் தவிர்த்து இன நலத்தை எண்ணுவோம். தன் வாழ்வைத் துறந்து இன வாழ்வை எண்ணுவோம்.

மற்றபடி உங்களின் மகன், தம்பி, என்று எண்ணிக்கொண்டு அழுது கொண்டு இருப்பதை விட,

— இத் தமிழினத்தின் உங்கள் மகன்களை, தம்பிகளை, மகள்களை, தங்கைகளைத் திரட்டிப் போருக்கு அனுப்புங்கள்!

முறத்தால் விரட்டி யடித்த வீரத்தைப் பேசிக் கொண்டிருந்தால் வீரம் வராது. செயல்படுத்துங்கள்!

வீரமகனைப் போருக்கு அனுப்புவதாக நாடகத்தில் நடிக்க வைத்து விட்டுத் தன் மகனை வீட்டில் பூட்டி வைத்திருக்கும் போலிமைகளைச் செய்யாதீர்கள்! யாரோ போர் செய்ய வரமாட்டார்கள். நாம் தாம் போராட வேண்டும்.

போராட வேண்டும் என்கிற உணர்வே, நமக்கு உறவே அன்றி, உடன்பிறந்த உறவெல்லாம் பொழுது போக்கிற்கானதே! பிறபின். அன்புள்ள;

பொழில்.

மடல்: 10

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய எம் அறிவாசான் அவர்களுக்கு வணக்கம்.

"வேட்டெஃகத்தை எடுத்தால்தான்
விடுதலையே தமிழகத்தில் விளையுமென்றால்,
பூட்டறுக்கப் புறப்படுவீர் — தமிழர்களே
உரிமை நலம் புதுக்குதற்கே" — என்றும்,

"வேடிக்கை யன்று விடுதலை;
வீரர்கள் விளைப்பதுவே"! — என்றும்,

— தங்களின் எழுத்துகளை என்றைக்கு நான் படிக்கத் தொடங்கினேனோ, அன்றைக்கே என் உள்ளக் கிடக்கையில் ஊறிக் குமிழ்விட்டது, புரட்சித் தீ!

மேலும் மேலும் தங்களின் எழுச்சி மிகு எழுத்துகளைப் படித்ததன் வழி கனன்று கொண்டிருந்த என் உள்ள நெருப்பை ஊதிப் பெருக்கியவர் 'தமிழரசன்' — அவர்கள்.

அதைத் தொடர்ந்து குருட்டுத்தனமாக அல்லாமல், உணர்ச்சிக்கு மட்டும் இடம் கொடுத்து விடாமல், அறிவுத் தழுவலோடு இயங்கத் திட்டமிட்டே ஓரளவு கருத்தறிவிப்பு நிலையிலும், செயல் நிலையிலும் எண்ணிச் செயல்படத் தொடங்கியுள்ளேன்.

திரள்கிற இளைஞர் கூட்டமே என் உள்ளத்தின் உணர்வுக்குத் துணையாக எம் பணியை மேலும் முடுக்கப் படுத்துகிறது. எம் செயல்களில் பதற்றம் இருப்பதாகத் தாங்கள் எண்ண வேண்டாம். அதை நெறிப்படுத்தி வளர்க்கத் தங்களுக்கு உள்ள முழு உரிமையை அருள்கூர்ந்து செயல்படுத்துங்கள்.

கருவி ஏந்துவதின் மூலம் மட்டும் புரட்சி செய்து விட முடியும் என்று வரட்டுத்தனமாக நான் நிற்கவில்லை. ஆனால் கருத்துப் பரப்புவதின் மூலமும் புரட்சி செய்து விட முடியும் என்றும் என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இரண்டு செயல்பாடுகளும் முழுமையாக ஒன்றிணையாமல் எந்த நாட்டு விடுதலையும் பகற்கனவே!

ஆனால், தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இரண்டும் தனிப்பட்டனவாகவே ஒன்றுக் கொன்று எதிரெதிராக வளர்ந்து வருகின்றன.

கருவிப் புரட்சியாளர்களுக்குக் கருத்துப் புரட்சியர் துணைநிற்பதில்லை. கருத்துப் புரட்சியரைக் கருவிப் புரட்சியர் மதிப்பதில்லை. இன்றைய நிலையில், தமிழகத்திற்கு இரண்டும் இன்றியமையாத தேவைகளாக இருக்கின்றன.

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, தாங்கள் தொடந்து கருத்துப் புரட்சியின் வகையில் கடுமையாகச் செயலாற்ற அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மூன்று இதழ்களிலும் தங்களின் முழு நேரத்தையும் செலவிட்டுக் கொண்டிருப்பதை விட, **தமிழ்நிலத்**தை முழு விடுதலை இதழாகவும், **தென்மொழி**யை விடுதலைக்கான இலக்கிய இதழாகவும், மாதம் ஒன்றெனக் கொண்டு வந்தால் போதும்.

அதுவல்லாத பிற நேரங்களில், தங்களின் சொற்பொழிவுக்கான கட்டணத்தை மிகவும் குறைத்துக் கொண்டு மாதம் குறைந்தது 10 பொதுக் கூட்டங்களுக்காவது போவது படியும், தங்களின் பேச்சு நாடாப்பதிவுகளை அங்கங்கே கொடுத்துப் பயன்படுத்தும் படியும், நிறையச் செய்ய மிகவும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

இன்றைக்கு உள்ள பல சிறுசிறு சிக்கல்களையும் விட்டு விட்டுத் தமிழ்நில விடுதலை என்கிற கருத்தோட்டத்தை மட்டும் வெளிப்படுத்துகிற வகையிலான நிகழ்ச்சிகளில் மட்டும் கலந்து கொள்ளுங்கள்.

தங்களின் இலக்கியப் பணி — மக்களுக்காக - ஓய்வு நேரப் பணியாக இருக்கட்டும். மக்களின் விடுதலைக்குத் தேவையானபடி, **மாவோ** போன்றும், **கார்க்கி** போன்றும் ஆன இலக்கியங்களைப் படையுங்கள்.

அறிவுக் கூட்டங்களுக்குத் தேவையான இலக்கியங்கள், பலரை உருவாக்கியது உண்மைதான். ஆனால், அக் கூட்டம் தங்களின் பாடல்களை மேடையில் முழக்கிப் பெயர் பெற்று, ஒதுங்கி நின்றதே அன்றித் தமிழின விடிவுக்குப் பணி செய்யவில்லை.

எனவே, அடித்தட்டு மக்கள் நிலையிலான கருத்துகளை இலக்கியங்களாகப் படைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு கோணங்களில் எல்லாரும் முழு மூச்சுடன் வேலை செய்வதாலேயே விடுதலை ஏற்படுமேயன்றி, கருவியேந்தியவர்களைக் கருத்தாளர்கள் தனிமைப் படுத்துவதாலும், கருத்தாளர்களைக் கருவியேந்தியோர் தனிமைப் படுத்துவதாலும் புரட்சி நடைபெற்று விடாது.

தாங்கள் இதற்கு விடை ஏதேனும் தெரிவிப்பீர்களாயின் இதழிலேயே வெளியிடுங்கள் இந்த இதழ்—**தென்மொழி** மிகவும் சிறப்பான பாடல்களுடன் இருந்தது ஆசிரியவுரையின் முடிவில் 'சமரச' — பேச்சு வகையில் தீர்வு போன்ற கருத்து தவிர்க்கப் பட்டிருக்கலாம் என எண்ணுகிறேன்.

மற்றபடி, என்றும் தங்களின் அறிவாற்றலுக்கு, அதன் வெளிப்பாட்டை முழுமையாக-எதிர் நோக்கியுள்ளேன். பணிவன்புடன், அன்புமகன்

பொழிலன்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஆயுசு) என்பது போல இருந்து வருகின்றன. அண்மையில் கருநாடக அரசும் இந்த நிலைக்குத்தான் ஆளாகி, அப்புறப் படுத்தப்பட்டுள்ளது. இது கொடுமையிலும் கொடுமை!

கருநாடகச் சட்டமன்றத்தில் 225 பேர் உறுப்பினர்கள். எக்டேவிற்குப் பின் பதவியேற்ற பொம்மை ஆட்சியில்ஆளுங் கட்சி உறுப்பினர்கள் 111 பேர் இருந்தனர். எனவே பொதுவுடைமை, மற்றும் ஓரிரு தோழமைக் கட்சிகளுடன் 118 பேர் கொண்ட பெரும்பான்மை உறுப்பினர்களுடன் ஆட்சி நடந்தது. ஆனால் எதிர்க்கட்சி ஆட்சி நடத்தும் மாநிலங்களை எப்படியாவது கலவரத்துக்கும் உறுப்பினர் கலைப்புக்கும் உட்படுத்தி, அதை ஆளுநர் உதவியுடன் கலைப்பதும், பின்னர் இந்திராக் கட்சியை ஆட்சியில் அமர்த்த முயற்சி செய்வதுமே இராசீவ் கொள்கையாக இருந்து வருகிறது. அந்த வகையில் இந்த முறையும் ஆளுங் கட்சியைச் சேர்ந்த 19 உறுப்பினர்களைத் தூண்டி விட்டு, அவர்களின் ஆதரவைத் திரும்பப் பெறச் செய்யும் தில்லுமல்லுகளைச் செய்து இந்திராக் கட்சி, பொம்மை ஆட்சியைப் பெரும்பான்மை இழக்கச் செய்து, தன் கைப்பாவையாக இயங்கும் கருநாடக ஆளுநர் வெங்கட சுப்பையாவை, முன் கூறப்பெற்ற அரசியல் அமைப்பியல் சட்டம் 356-இன் படி அறிக்கை கொடுக்கச் செய்தது தில்லி. அந் நிலையைத் தெரிந்து கொண்டபின், மாநில முதல்வர் பொம்மை ஆதரவை நீக்கிக் கொண்ட 19 உறுப்பினர்களில் 12 பேரைத் தங்கள் முடிவை மாற்றிக் கொண்டு, தொடர்ந்து சனதா தளத்திற்கு ஆதரவு தருவதாக ஆளுநர்க்கு எழுத்துவழித் தெரிவிக்கச் செய்தார். இருந்தும் 'முன் கொடுத்த ஆதரவு நீக்க மடல்களின் படி, தாம் நடுவணரசுக்கு அறிக்கை கொடுத்து விட்டதாகவும் முடிவை மாற்ற முடியா' தென்றும் கூறி விட்டார், ஆளுநர். அதன்படி உடனே ஆட்சி கவிழ்க்கப் பட்டுக் குடியரசுத்தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வந்துள்ளது.

கருநாடக முதல்வர் திரு. **சோமப்ப ராயப்ப பொம்மை** பதவியேற்று ஏறத்தாழ 8 மாதங்களே ஆகிறது. கோடிக்கணக்கான மக்களால் குடி நாயக முறைப்படி பெற்ற ஓர் அரசை, தில்லியரசின் கையாளாக இயங்கும் ஆளுநர் ஒருவர் எளிதாக, ஆட்சியிலிருந்து அகற்ற முடிகிறதென்றால், இராசீவ் குடியரசு நடத்துகிறாரா? அல்லது காட்டாட்சி என்னும் —

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

பிழை திருத்தம்!

இவ் விதழ் 6-ஆம் பக்கக் கட்டுரை அடுத்த இதழில் தொடரும்.

Scanned with CamScanner

இயக்கங்களில் பணி செய்வோர்க்குத் தந்தை பெரியாரின் அறிவுரை!

நான் யாரையும் எந்தப் பணியையும் பொறுப்பேற்றுக் கொண்டவர்கள் இடம் விட்டு விடுவது வழக்கம். பொறுப்பேற்காமல் அதிகாரம் செய்பவர்களைப் பொருட்படுத்தாமல் விட்டு விடுவதும் வழக்கம். நம் இயக்கங்கள் தொண்டாற்றித் தொல்லை ஏற்றுக் கொண்டு தொல்லைப் பட வேண்டிய இயக்கங்களாகும். இதில் வெறும் அதிகாரக்காரர்களுக்கு இடம் கொடுத்தால் தொண்டாற்றுகிறவர்கள் சலிப்படைந்து விடுவார்கள். ஒரு தலைவன் வேண்டும். அவன் நடத்துபவனாய் இருக்க வேண்டுமேயொழிய நடத்தப்படுபவனாய் இருக்கக் கூடாது. அடுத்தாற்போல் பின்பற்றுபவர்கள் இருக்க வேண்டும். அவர்கள் தலைவர் கருத்துகளுக்கு ஒப்புக் கொண்டு (ஒத்து) உழைக்கிறவர்களாக இருக்க வேண்டும். அதற்குத்தான் ஒத்துழைப்பென்று பெயர். அதிகாரம் செய்து கொண்டு தலைவரை நாள் திட்டம் (டைரி) கேட்பவர்களாக இருக்கக் கூடாது. பல பேர்கள் அதிகாரம் செய்தாலும் பணி கெட்டுப் போகும்.

சிலருக்குப் பின்பற்றுவது அவமானமாய் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு வேறு பல கட்சி அமைத்துக் கொள்ள பல வசதியும் வேறு செயல்களும் அப்படிப்பட்ட தொண்டர்களை ஆதரிக்க பல தலைவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் நம் கட்சிகள் அப்படிப்பட்டவையல்ல. பின்பற்றித் தொல்லைப் பட வேண்டியது. சிறை வாழ்க்கை, குடும்ப இழப்பு, வாழ்வுக் கேடு, எளிய மக்களிடம் அவமதிப்பு, அரசிடம் வெறுப்பு முதலியவை அடைய வேண்டிய தொல்லையான செயலுக்குட்பட்டதாகும். இதற்கு, அப்படிப்பட்ட செயல்களில் நம்பிக்கையும், அவற்றிற்கு அணியமாகும் தகுதியும் உள்ளவர்களுக்கே இடம் இருக்க முடியும். இல்லாதவர்கள் வீண் மனத்தொல்லைகளையும், கட்சிப் போக்கைத் தடைப் படுத்தி முட்டுக் கட்டை போடும் வேலையையுமே செய்ய வேண்டியிருக்கும்.

இந்த முட்டுக்கட்டைக்காரர்களிடம் எனக்குப் பேராயக் கட்சியிலிருந்த காலம் முதல் பட்டறிவுண்டு. தேவையில்லாத காலம் வரை, தெரியாதவன்போல் இணங்கி இருப்பேன். தேவை ஏற்பட்டதும் யாரையும் உதறித் தள்ளிவிட்டு, என் கடமையை நிறைவேற்ற முனைந்து விடுவேன். அப்படிச் செய்தால்தான் உண்மையாகப் பாடுபடுவதாகக் கருதிக் கொண்டிருப்பவனுக்கு நிறைவேற்படும். இஃது இயற்கை. ஆதலால் 'அனைத்ததிகாரம்' என்பதைக் குறை கூறாதீர்கள். மக்கள் நாயகம் (ஜனநாயகம்) என்பதே பித்தலாட்டமான செயல், நமக்கு. அது பித்தலாட்டமும் முட்டாள்தனமானதுமான செயல்.

நீங்கள் பெரிதும் இந்த இயக்கத்தில் தொண்டாற்றுவதை என்னிடம் நம்பிக்கையுள்ளவரை என் செயலுக்கு உதவி செய்வதாய்க் கருதுங்கள். நம்பிக்கையற்றபோது என்னைத் தள்ளி விடுங்கள். அல்லது என் தலைமையை உதறித் தள்ளி விட்டு விட்டுப் போய், ஒரு கட்சி அமைத்துக் கொள்ளுங்கள். அந்த மாதிரியாக இருந்தால்தான் தன்னலமற்ற தொண்டு செய்ய முடிகிறது. இதை 25 ஆண்டுகளாய்ச் சொல்லி வருகிறேன்.

குடி அரசைப் பாருங்கள்; என் பல பேச்சைப் படியுங்கள். மதிப்பும் சாய்காலும் ஏற்படுகிறவரை இவற்றைப் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் கூடவேயிருந்து, பெரியார் சொல்வதுபடி நடப்பதாகப் பொய் மெய்ம்மம் (சத்தியம்) செய்வதும், உறுதி கூறுவதும், தங்களுக்குத் தனிச் சாய்கால் ஏற்பட்டதாக நினைத்தவுடன், அல்லது வசதிக் குறைவு ஏற்பட்டவுடன், 'பெரியார் வல்லதிகாரம்' என்று கூறுவதும் நாணயமான செயலாகாது.

நமக்கு வேண்டியது நம் இழிவும் நம் அடிமைத் தன்மையும் நீங்க வேண்டியது. இதற்கு என் வழி தனி வழி. தனிவழியுள்ளவர்கள் தனியாய், தன் விருப்பமாய் நடத்துங்கள். என் மீது சினவாதீர்கள். முட்டுக்கட்டை போடாதீர்கள். தோழர்கள் சிலர் பேசுவது போல, 'முட்டாள்களாய் இருக்கும் வரை என் கூட' இருந்ததாகவும், இப்போது அறிவு ஏற்பட்டவுடன் விலகிக் கெட்டிக்காரர்களாக, எச்சரிக்கைக்காரர்களாக ஆகிவிட்டதாகக் கூறிப் பெருமையடைவதுபோல், மற்றவர்களும் ஒவ்வொருவரும் முட்டாள்களா அறிவாளிகளா என்று இப்போதே, சிந்தித்துத் தொண்டில் இறங்குங்கள். ஏனெனில் எதிர்காலத்தில், அண்மையில், உங்களுக்குப் பெரிய துன்பங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை வரும். அப்போது மற்றவர்களைப் போல் என்னை **வல்லதிகாரி** என்று குற்றம் சாட்டிவிட்டு, மற்றவர்கள் போல் கைவிட்டு ஓடி விடாதீர்கள்; தொல்லை கொடுக்காதீர்கள்.

குடியரசு. 25-8-45 —ஈ. வே. இரா.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

(தொடர்; 3)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை..!

தமிழ்நாடு விடுதலைப் படைகளும் இந்தி(ய)ப் பாசிசக் கும்பல்களும்!

-செ. அமிழ்தன்-

பண்பாட்டு நடுவமும் பால வெடிப்பும்:

காலமெல்லாம் தன் இருண்ட குழி விழுந்த கண்களின் மூலம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை காவிரி நீர் தென்படுமா என ஏங்கியிருந்த மக்களுக்குச் செவிப்பறையைக் கிழித்தெறியும் "காட்டுத்தனமானக் கூச்சல் நடுவம்" என்ன காவிரியின் நீரை இசையின் மூலமாகவா இழுத்து வரும்? என்றேதான் தென்னகப் பண்பாட்டு நடுவத்திற்கு எதிர்ப்புணர்வு கிளம்பியது. அந்த எதிர்ப்புணர்வைக் காட்ட வேண்டும் என்ற வேகமும் உடனெழுந்தது. அதன் வெளிப்பாடே இந்தி(ய)த் தில்லியின் பாசிசப் பேரரசர் இராசீவ் உலாவரும் வழியில் பால வெடிப்பு.

ஏனெனில் மக்களின் உண்மையான பண்பாட்டைக் காக்கக் கூடியவர்கள் மக்களே ஆவார்கள். "பண்பாடு காப்பாற்றப் பட வேண்மெனில் மக்கள் வாழ்தல் வேண்டும். மக்கள் வாழ்ந்தால் மட்டுமே மக்களுடைய பண்பாடு வாழ முடியும்; மக்கள் தங்களுடைய பண்பாட்டைக் காக்க முடியும். மக்களின்றிப் பண்பாடு இல்லை; வாழ்க்கை இன்றிப் பண்பாட்டால் பயனில்லை. பண்பாடு பரம்பரைத் தன்மை கொண்டது அன்று; மாறுகப் பரந்து பட்ட மக்கள் தன்மை கொண்டதாகும். மக்கள் பண்பாட்டைக் காக்கத் தனியே நடுவங்கள் தேவையில்லை. மதங்களின் பண்பாடுகளை—பண்பாட்டு வெறிகளைக்—காக்கவே கோயில்களும், மடங்களும், நடுவங்களும் தேவை. முறையான, ஒழுங்கான வாழ்க்கை நெறிகளே மக்களுடைய பண்பாட்டை, மாந்தப் பண்பாட்டைக் காக்கும் ஆற்றல் கொண்டவை. பண்பாட்டைக் காக்க மக்களுக்குத் தேவை பசியற்ற-பயனுள்ள வாழ்க்கையே', பாசிச இராசீவ் கும்பல் நிறுவும் வெறும் நடுவங்கள் அல்ல.

இதைச் சிறிதும் உணராமல் இந்தி(ய) ஆளும்—பாசிசக்—கும்பல்கள் பசியின் தன்மை உணராது, மக்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாது தங்களுடைய ஆடம்பரப் பண்பாட்டையே 'இந்தி(ய)த் தென்னகப் பண்பாடு' என்றும், 'மக்கள் பண்பாடு' என்றும் கூறி, பத்து கோடிகளுக்கும் மேலான மக்களின் வரிப்பணத்தை வாரியிறைத்தனர். அதன் மூலம் மக்களின் கோரிக்கைகளை, அவர்களின் வாழ்க்கையைக் காற்றில் பறக்க விட்டனர். மக்களைப் பசியில் வாட வைத்துத் தங்களுடைய ஆடம்பர வெறிப் பண்பாட்டைக் கட்டிக் காக்க முனைந்தனர். அவற்றின் மொத்த உருவமே "பாசிசத் தென்னகப் பண்பாட்டு நடுவம்." இதற்கு எதிராக எழுந்த எதிர்ப்புணர்வின் விளைவே பால வெடிப்பு.

காவிரி நீர் உரிமைச் சிக்கலும்; இந்தி(ய) ஆட்சி வெறியர்களின் நிலையும்:

உண்மையில் இந்தி(ய) நடுவணரசாக உள்ள தில்லி வல்லரசும், மாநில அரசுகளாக உள்ள தமிழக மற்றும் கருநடாகப் பாதந்தாங்கிகளும் இக் காவிரிநீர் உரிமைச் சிக்கலில் கையாண்டு வரும் கொள்கை என்னவாக இருக்க முடியும்? அ'து உழைக்கும் மக்களை இன வழியாகவும், அரசு வழியாகவும் பிரித்தாளும் வேற்றுமைச் சூழ்ச்சியாகவே இருக்க முடியும்.

இந்தி(ய) ஆளும் வல்லரசாக உருப்பெற்று வரும் நடுவண் தில்லியரசைப் பொறுத்த வரையில் காவிரி நீர்ச் சிக்கல் என்பது, இரண்டு இன மக்களிடையே இரு மாநில அரசுகளுக்கிடையில்-உள்ள ஒரு சிக்கல் ஆகும். இ'து எந்த நிலையிலும் (அதன் மொழியிலேயே) ஒரு தேசியச் சிக்கல் ஆகாது. எனவே அதில் தில்லி நடுநிலையை மட்டுமே பெற்று வரமுடியும் என்றே வந்துள்ளது. இ'து அதன் நயவஞ்சக ஆளுமை வெறியின் வெளிப்பாடாகும். இதில் தலையிட்டுத் தீர்வு கண்டால்—நாடளுமன்றத்திற்கான 'தேர்தல் திருவிழாவில்—தாக்கமுறும் மாநில மக்களின் ஓட்டுக்களைப் பெற முடியாது என்ற ஓட்டுப் பொறுக்கிக் குணத்தின் வெளிப்பாடாகும். அதனால்தான், "மாநிலங்களுக்கிடையேயான ஆற்று நீர் வழக்குச் சட்டம் (Inter State Water dispute Act 1956). ஆனது. "மாநிலங்களுக்கிடையேயான ஆற்று நீர்த் தொடர்பாக எந்தவொரு தீர்வோ அல்லது உடன்பாடோ ஏற்படாத நிலையில், இந்திய நடுவணரசு தலையிட்டுத் தொடர்புள்ள மாநில அரசுகளின் ஒப்புதலுடன் ஒரு நடுவர் குழுவை அமைத்துத் தீர்வு காண

உதவலாம்" என்று வலியுறுத்தி உள்ள போதிலும், அத்தகைய நடுவர் குழுவை அமைத்துத் தீர்வு காண மறுத்து வருகின்றது.

இதனால் அத்தகைய நடுவர் குழு ஒன்றை அமைத்துத் தீர்வுகாணக் கோரி 1970 முதலே தமிழக மக்கள் வலியுறுத்திப் போராடி வரும் போதிலும், அதை ஏற்காமல் அமைதியாகவே நடுநிலை தாங்கியும் வருகின்றது. இத்தகைய நயவஞ்சக நடுநிலையோடுதான் உடன்பாடுகளை மீறிக் கருநாடக அரசு பல அணைகளைக் கட்டிக் கொள்ள ஒப்புதல் கோரிய போதெல்லாம், ஒப்புதல் அளித்து இச்சிக்கலை வளர்த்தும் வருகின்றது. இதன் மூலம் **ஓர் அரசிற்கு எதிரியாக மற்றோர் அரசை நிறுத்தும்—ஓர் இன மக்களுக்கு எதிரியாக மற்றோர் இன மக்களை நிறுத்தும்—வேலையைச் செய்தும் வருகின்றது. இதுவே இந்தி(ய)த் தில்லி வல்லரசின் வேற்றுமைப்படுத்தி ஒற்றுமை காணும் இந்தி(ய) ஒருமைப் பாட்டுக் கொள்கை யாகும்.** (அவர்களின் மொழியில் கூறுவது எனில் இதுவே தேசிய நீரோட்டமும், தேசிய ஒருமைப்பாடும் (National Mainstream and National Integration) ஆகும்.

காவிரி நீர் உரிமைச் சிக்கலும் கன்னட இன வெறியும்:

கருநாடக மாநில அரசினைப் பொறுத்த வரையில் "காவிரியாறு கருநாடகத்திற்கே **உரிமை உடையது. அதைத் தமிழக மக்கள் பயன்படுத்துவதும், உரிமை பாராட்டிப் பங்கு கேட்பதும் முறை கேடானதாகும்" என்னும் கன்னட இனவெறிக் கொள்கையைக் கொண்டே** இச்சிக்கலைப் பார்க்கிறது. எனவேதான் 1892 மற்றும் 1924 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட **உடன்பாடுகள், காவிரி ஆற்றிலோ, அதன் துணையாறுகளிலோ எந்த வகைப்பட்ட அணைகளையும், கருநாடக அரசு கட்டுதல் கூடாது. அவ்வாறு கட்ட வேண்டுமெனில் காவிரியாற்றின்—அதன் பெரும்பான்மைப் பாசனப் பகுதிகளைக் கொண்ட தமிழக அரசிடம் ஒப்புதலைப் பெற வேண்டும்" என்று அறிவுறுத்தியுள்ள போதிலும்,** அதன்படி நடக்காமல் தன் தலைக்கேறிய கன்னட இன வெறியால் தமிழக உழைக்கும் மக்களைத் தாக்கும் வகையில், **"அந்த உடன்பாடுகள் முடிவடைந்து விட்டன. எனவே அவற்றின்படி கருநாடக அரசு நடக்கத் தேவையில்லை,"** எனக் கூறிக் கொண்டு, தனது அதிகாரி தில்லியரசின் துணையுடன் மேலும் மேலும் பல அணைகளைக் கட்டித் தனது இந்தி(ய) ஆளும் கும்பல் சார்பையும் நிலை நாட்டி வருகின்றது.

தமிழகப் பாதந் தாங்கிகளும் காவிரி நீர் உரிமைச்சிக்கலின் நிலையும்:

இந்தி(ய)த் தில்லி வல்லரசின் தமிழகப் பாதந்தாங்கிகளைப் பொறுத்த வரையில் (அவர்கள் யாராக—எந்தக் குழுவாக இருந்தாலும்) தில்லிக்குச் சார்பாகத் தாங்கள் பார்த்துக் கொள்வதையும், தில்லிக்குத் திறை செலுத்துவதன் மூலம் தங்களுடைய ஆடம்பர வாய்ப்புகளைக் காத்துக் கொள்வதையுமே தங்களுடைய கொள்கையாகக் கடைபிடித்து வந்துள்ளனர்; தற்போதும் வருகின்றனர். **இதற்குத் தமிழக அரசினுடைய சார்பில் 1971-இல் இந்தி(ய) உச்ச நெறி மன்றத்தில் காவிரி நீர்ச் சிக்கல் தொடர்பாகத் தாம் கொடுத்த வழக்கை, இந்தி(ய) வல்லாட்சியின் (பாசிச இந்திராவின்) ஆணையினால் அன்றைய தி.மு.க. அரசே திரும்பப் பெற்றுக் கொண்டதே சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்த திராவிடப் பாதந்தாங்கிகளுக்குக் காவிரி நீர் உரிமைச் சிக்கலென்பது தமிழக மக்களின் உரிமைச் சிக்கல் அன்று; அது கவலைப் படக்கூடிய சிக்கலும் அன்று. மாறாகத் தில்லிக்குக் காவடி தூக்கும் தங்கள் தரகு வேலைக்குக் கிடைத்த நல் வாய்ப்பே ஆகும்.** (இந்த திராவிட(ர்)ங்களின் இழிந்த ஆட்சியையே தமிழரின் ஆட்சியெனவும், தன்மானத்தின் ஆட்சியெனவும் தமிழகத் திராவிட அரசியல் தரகர்கள் பிதற்றித் திரிவார்கள்). அதனால்தான் தி.மு.க-விற்குப் பின் வந்த அ.இ.அ.தி.மு.க. அரசும் இச்சிக்கலைப் பற்றிக் கவலை கொள்ளாது பாசிசர்களின் (Fascists) கூச்சல் பண்பாட்டுக்கு நடுவம் அமைக்கப் பாசிசக் கும்பலுக்கு உதவியது.

உழைக்கும் மக்களின் வாழ்க்கைக்கு உதவாத வக்கற்ற இந்தி(ய) பாசிசக் கும்பலுக்குப் பத்துக் கோடிக்கும் மேலான மக்களின் வரிப்பணத்தை வாரியிறைத்துப் "பாசிசக் கூச்சல் நடுவம்" அமைத்து மக்களின் உழைப்பைப் புறக்கணித்தது. **புறக்கணிப்புக்கெதிரான உழைக்கும் மக்களின் எதிர்ப்பே குடமுருட்டியில் குண்டு வெடிப்பாக நிகழ்ந்தது. இதில் உழைக்கும் மக்களின் எதிர்ப்பு என்பது அடங்கி இருந்தாலும் இவ்வணுகுமுறை உழைக்கும் மக்களின் போராட்டத்திற்கு எதிரானதே ஆகும்.** அதைப் பற்றிப் பின்னர் பார்ப்போம். இனி அடுத்த நிகழ்வுகளுக்குள் செல்வோம்.

இந்தி(ய)ப் பாசிசக் கும்பல்களும், உளவுப் படை வன்முறைக் கொள்கையும்:

குடமுருட்டிப் பாலவெடிப்பையடுத்துத் தொடர்ச்சியான பல வெடிகுண்டு நிகழ்வுகள் தமிழகத்தில் திருவல்லிக்கேணி, பெரம்பூர், மெரினா, திருச்சி,முத்தரச நல்லூர், மதுரை அஞ்சல் நிலையம் போன்ற இடங்களில் நிகழ்ந்தன. இவற்றுடன் பல திட்டமிட்ட வன்முறைக் கலவரங்களும் நடந்தேறின. இவை அனைத்தும் தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் புரட்சிகர அமைப்புகளை ஒடுக்கு-

Scanned with CamScanner

வால்மீகியே சொல்கிறார்! இராமன் ஒழுக்கக் கேடன்! ஆட்சிக்குத் தகுதியற்றவன்! கடுங் கொடிய குற்றவாளி! இராம ராச்சியம் என்பது காந்தியின் ஏமாற்று உரையே!

இந்த நாட்டில் பொது மக்களை மதத்தின் பெயரால் எதையும் யாரும் சொல்லி ஏமாற்றலாம்.

காந்தி இராமனை முன் வைத்துச் சொன்ன இராமனாட்சி (இராமராச்சியம்) என்பதைப் போலும் பெரிய ஏமாற்று-புளுகு உலகில் இருக்க முடியாது. ஆனால் தெரிந்தோ தெரியாமலோ அவர் அதை இறுதி வரை சொல்லிக் கொண்டுதானிருந்தார். இவ்வளவு பெரிய ஒருவர் பொய்யா சொல்லப் போகிறார் என்று மக்களும் நம்பிக் கொண்டுதான் இருந்தார்கள்.

ஆனால், உண்மை என்ன? இராமன் பெரிய ஒழுக்கக் கேடன்; ஆட்சிக்குத் தகுதியற்றவன்; குடி மக்கள் மேல் அக்கறையற்றவன்; கடுங் கொடிய குற்றவாளி. இதை யாரும் சொல்லவில்லை. வால்மீகியே தம் இராமாயண பாவியத்தில் விளக்கமாகக் குறிப்பிடுகிறார். அதனால் இராமன் தெய்வப் பிறப்பு என்பதும் பொய்யாகப் போய் விடுகிறது. ஒரு மனைவிக் கொள்கையன் (ஏகபத்தினி விரதன்) என்பதும் புளுகாகிப் போகிறது.

கீழே வால்மீகி கூறுவதைப் படியுங்கள்:

இராமன் அரியணை ஏறிய பின் அவனுடைய அன்றாட நடவடிக்கைகளை மிகக் குறிப்பாகவும், தெளிவாகவும் வால்மீகி எழுதுகிறார்.

அதன்படி இராமனின் வாழ்வில் ஒருநாள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டன. நண்பகலுக்கு முன்னர் ஒரு பகுதி என்றும், நண்பகலுக்குப் பின்னர் வேறொரு பகுதி என்றும் வரையறுக்கப் பட்டது.

காலை முதல் நண்பகல் வரை இராமன் மதத் தொடர்பான ஒழுக்கங்கள், நடைமுறைகள், மற்றும் சடங்குகளை நிறைவேற்றுவதிலும், வழிபாடு செய்வதிலும் காலத்தைக் கழித்தான், நண்பகலுக்குப் பின் அரசவைக் கோமாளிகளுடனும் உவளக (அந்தப்புர)ப் பெண்களுடனும் மாறி மாறித் தன் நேரத்தைக் கழித்தான். உவளகப் பெண்களுடன் கூடிக்களித்து அயர்ந்திட்டால் கோமாளிகளுடன் பேசிக் களிப்பான்; கோமாளிகளுடன் பேசிக் களைப்புற்றால், உவளகப் பெண்களை நோக்கி ஓடுவான். (வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், சரகம் 43, சொலவகம்: 1.)

இராமன் உவளக (அந்தப்புர)ப் பெண்களோடு நுகர்ச்சி துய்த்த களியாட்டங்களை வால்மீகி மிக விரிவாகவே விளக்குகிறார். பிண்டி மரக்கா (அசோகவனம்) என்னும் அழகிய பூங்காவிற்கிடையில் இவனுடைய உவளகம் (அந்தப்புரம்) இருந்தது. அங்குதான் இராமன் சாப்பிடுவது வழக்கம். இராமனின் உணவில் அருஞ்சுவைப் பண்டங்கள் அனைத்தும் இடம் பெற்றன. மது, இறைச்சி, பழ வகைகள் அனைத்தும் அவன் உண்டான். இராமன் அளவுக்கதிகமாகவே மது அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தான். அப்படிக் குடித்து விட்டு அவன் போடும் கூத்தாட்டத்தில் சீதையையும் கலந்து கொள்ளச் செய்தான். (உத்தர காண்டம் சரகம் 42, சொலவகம்:8). என வால்மீகி குறிப்பிடுகிறார்.

மேற்படி பகுதிகளில் உவள்கப் பெண்களுடன் வாழ்ந்து கழித்ததாய் வால்மீகி கூறும் விளக்கங்கள் எளியன அல்ல.

உவளகத்தில் இயல், இசை, நாட்டியத்தில் புகழ் பெற்ற கிண்ணரி, உதமா மற்றும் தேவ உலகப் பெண்கள் போன்ற பேரழகிகள் இருந்தனர். இவர்களும் போதாரென்று, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பெண்ணழகிகள் எல்லாரும் அவனுடைய உவளகத்திற்குக் கொண்டு வரப் பெற்றனர். இப்படிப் பட்ட அழகிகளின் நடுவில்தான் இராமன் குடித்துக் கூத்தாடிக் கலந்து மகிழ்ந்து களிப்புற்றுக் கிடந்தான். அப் பெண்களெல்லாரும் இராமனை மகிழ்விக்கப் பெரும்பாடு பட்டனர். அச் செயல்களுக்குப் பரிசாக அப்பெண்களுக்கு விலையுயர்ந்த மணிமாலைகளை அணிவிப்பானும். வஞ்சியர்களின் வளையத்துள் கிடந்த ஆடவர்களுள் இளவரசன் இராமன்தான் முதல்வன் என்கிறார் வால்மீகி. இவையெல்லாம் இராமனின் ஒருநாள் நிகழ்ச்சிகளல்ல. இராமனுடைய அயோத்தி வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளே என்கிறார் வால்மீகி.

நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளில் இராமன் எப்போதுமே பங்கேற்றதில்லை என்கிறார் வால்மீகி. நாட்டு மக்களின் குறைகளைக் கேட்டு, அவற்றைத் தீர்க்கிற பழங்கால மன்னர்களின் பழக்கத்தைக் கூட இராமன் ஒருபோதும் கடைப் பிடிக்கவில்லை என்று எழுதுகிறார் வால்மீகி. தம் மக்கள் குறைகளை ஏதோ ஒரு தடவை மட்டும் இராமன் நேரில் கேட்டதாக வால்மீகி ஒரு சூழ்நிலையைக் குறிப்பிடுகிறார். அதுவும் ஒரு துயரமான நிகழ்ச்சியாய்த் தெரிகிறது. அக்குறையைத் தாமே தீர்த்திடுவதாகப் பொறுப்பேற்றுக் கொள்கிறான் இராமன். அப்படிச் செய்கையில் வரலாறு காணாத கடுங் கொடிய குற்றத்தைச் செய்கிறான் இராமன். அது-

உருசியாவிலும் தேசிய மொழித் திணிப்பு!

பறம்பை அறிவின்

திரைப்படப் பாடலாசிரியராக அறிமுகம் ஆகியுள்ள பாவலர் வைரமுத்து மரபுப் பாடலில் பெயர் பெற்றவரே! அவர் தமிழர்கள் ஒரு தேர்ந்த கொள்கையைப் பின்பற்றுதல் வேண்டும் என்றார். தமிழர்கள் 'தலை பிய்ந்த கருவாடுகளாக' இருப்பதை அவர் கோணத்தில் பேசினார். ஆயினும், 'எந்தக் கொள்கை' சரியானதென்று அவரே தம் பேச்சில் முன் வைக்கவில்லை,

'தமிழ் நாட்டில் Chief Minister முதல் அமைச்சர் ஆகிறார், Chief Secretary முதன்மைச் செயலர், தலைமைச் செயலர் ஆகிறாரே எப்படி?' என்று கேட்டார். மொழி பெயர்ப்புக் குறித்து வைரமுத்து எச்சரிக்கை செய்தார்.

"ஒருவேளை மொழி பெயர்ப்பாளர் இல்லாவிடில் பொதுவுடைமை (நூல்கள்) இங்கே பரவி வெற்றி பெற்றிருத்தல் கூடும்" என்றும் வைரமுத்து கூறினார்.

தோழர். நா. முகமது செரிபு சோவியத்து நாட்டில் தங்கியிருந்து, மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டவர். இவர் பேசும்போது, "உருசிய மொழியில் வெளியிட்டால் 20 கோடி நூல் விற்கும், வேறு சோவியத்து மொழியில் வெளியிட்டால் 20 இலக்கம் நூல் விற்கும்" என்று விளக்கினார். இதனால் எழுந்த 'மொழிச் சிக்கல்', 'தேசியமொழி'ச் சிக்கல்கள் சோவியத்திலும் இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

'உருசிய மொழி அங்கே திணிப்பதன் காரணமாகப் பரவவில்லை. 'தேவை'யின் காரணமாகச் சாய்காலைப் பெறுகிறது— என்றபோதும், ஒரு தேசிய இன மொழியைத் தாக்குகின்ற சிக்கலைத் தீர்த்திட அரசியல் வழியில் முடிவு காண வேண்டியிருக்கும்' எனலாம்!

விழாவிற்குத் தோழர் அறிவுமதி என்ற நல்லிளைஞர் அங்கே வந்திருந்தார். சட்டமன்ற அருவருப்பை அரசியல் ஆக்கும் கொடுமையை ஒரு பாடலாக்கிப் பாடியும் காட்டினார்! நேருக்கு நேரான அரசியல் காரணமாகப் பாடல்களைப் பாடிப்பரப்பிக் கொடுந்துன்பங்களுக்கு ஆளாகிய புரட்சிப் பாவலர்களை நாம் மறந்து விட முடியாதன்றோ? நினைப்போம்!!

(முன் பக்கத் தொடர்ச்சி)

தான், சூத்திரனான சம்புகன் பார்ப்பனர்களுக்கே உரித்தான தவத்தைச் செய்வதற்காக, இராமனால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியாகும்.

அவள் 'இராவணனிடம் உடலுறவு கொண்டிருப்பாள்' என்று சீதையின் பால் ஐயங்கண்டு இராமன் அவளைக் காட்டுக்கு அனுப்பி வைக்கிறான். இராமன். அங்கு சில காலம் வாழ்ந்த பின், இறுதியில் சீதை நீர் மல்கிய கண்கள் நிலம் நோக்கிட இருகைகளையும் கூப்பிக் கும்பிட்டுக் கொண்டு, சீதை சொல்கிறாள்: 'இராமனைத் தவிர வேறோர் ஆடவனை நான் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. அஃது உண்மையானால், நிலமகளே நீ வாய் திறப்பாய்; நான் புதையுண்டு போகிறேன். என் சொல்லிலும், செயலிலும், நனவிலும் கனவிலும் எப்போதும் நான் இராமனையே விரும்புகிறேன், அது உண்மையானால், நிலமகளே! நீ வாய் திறவாய்! நான் புதையுண்டு போகிறேன்!" என்றாள், சீதை சொற்களை உதிர்க்கும் போதே நிலம் பிளந்தது! சீதை உட்புகுந்தாள். அஃதாவது காட்டுவிலங்காண்டித்தனமானவனைவிட, இழிவாக நடந்து கொண்ட இராமனுக்கு மனைவியாய்த் திரும்பப் போய் உயிருடன் வாழ்வதைக் காட்டிலும், சீதை சாவையே விரும்பி ஏற்றுக் கொண்டாள்.

கடவுள் பிறவி என்று சொல்லப் பெறும் இராமனின் கயமையும், சீதையின் துயரமும் மூல இராமாயணமான வால்மீகி இராமாயணத்தில் இவ்வாறு காணப்படுகிறது.

—பர், அம்பேத்கர்.
The Riddes of Hinduism
நன்றி. 'முன்னோடி' —'சன-மார். 89

தொழிற் கழகங்கள்!

தமிழகத்தில் கட்சிகள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளத் தொழிற் கழகங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் அவை, வெறுமனே பொருளியல் கோரிக்கைகளிலேயே அமிழ்ந்து கிடக்கின்றன.

தி.மு.க. போன்ற இன மான, மொழி இயக்கங்கள் கூடத் தங்களின் திட்டவட்டமான அரசியல் அடிப்படையைத் தொழிலாளர்களிடம் மூனந்து வைப்பதில்லை. பொதுமைக் கட்சிகளும் தங்களின் அரசியல் தீர்வை முன் வைத்து அமைப்பைக் கட்டுவதில்லை. ஆசிரியர், அரசு ஊழியர் போன்ற அமைப்புகளும், தங்களின் கல்வி, அரசு பற்றிய அடிப்படை நோக்கங்களைத் தெளிவு படுத்தாமல் வெறுஞ் சங்கங்களாக' (Associations) உலவி வருகின்றன. இவற்றுக்குள், தலைமைப் போட்டிகளும், கூட்டங் கூட்ட மேற்கொள்ளும் கவர்ச்சியான—கீழ்த்தரமான—உத்திகளும் வளர்ந்து வருகின்றதைப் பார்க்கிறோம். O

Scanned with CamScanner

பறம்பை அறிவன் பக்கம்!

1. சட்டமன்ற நடைமுறை சரியா?

சட்டப்பேரவையின் நடவடிக்கைகளை 'அப்படியே' அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு. இதனை மறுக்கும் அரசியல் அமைப்பை மாற்றுதல் வேண்டும். இதற்கான விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகின்றதெனலாம்; இதனை மதித்து, ஆளுங்கட்சியினர் எதிர்காலத் தலைமுறையின் நலங்கருதி உண்மைகளை ஒப்புக் கொடுத்தல் வேண்டும்!

'பேச்சு'களை நீக்குவதும் என்ன நடந்ததென் பதைத் திரையிட்டு வைப்பதும், சட்டப்பேரவை உறுப்பினர்களில் எவர் 'சரியானவர்', சரியற்றவர்' என அறிந்து கொள்ளத் தடையாக இருக்கும் அன்றோ?

அண்மையில், இந்தியாவில் உள்ள சட்டப் பேரவைகளில் நடந்த நிகழ்ச்சிகள் யாவும்— நாடாளுமன்ற நடவடிக்கைகள் யாவும் மக்களைச் சென்றடைய வேண்டும்! அப்போதே, மக்கள், எதிர்காலத்தில் சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றுதல் இயலும்!

வெறுமனே, மக்கள் மேல் பழி போட்டு, "நீங்கள்தாமே 'இவர்களை'த் தேர்ந்தெடுத்து அனுப்பினீர்கள்", என்று கூறுவதில் பொருளில்லை...!!

2 பூட்டாசிங் உணர்வாரா?

"இந்தியா பன்முகத் தேசியத் தன்மை கொண்டது என்பதையோ பல நாடுகள் அடங்கிய ஓர் ஒன்றியம் (யூனியன்) என்பதையோ ஏற்க இயலாது" என்கிறார்,—பூட்டாசிங். (தினமணி 6-4-89)

பூட்டாசிங் எதிர்பார்ப்பு—விருப்பம் சரிதான். உண்மை அப்படி இல்லையே 'மண்ணின் மைந்தர்' என்ற வழக்கு வருவதன் அடிப்படையை மறுப்பது, 'ஒருமைப்பாடு' பற்றி அமைப்பதெல்லாம் மக்களாட்சி முறைக்கு எதிரான வென்பதைப் பூட்டாசிங் உணர்வார் என்று நம்பலாம்.

3. கடன் வாங்கிக் கலியாணமா?

"இந்தியாவின் கடன் சுமை ஏறத்தாழ உருபா 90,000 கோடியாக இருக்கும்"—என்று பொருளியலறிஞர் அசோக் மித்ரா கூறுகிறார்.

எழுபது கோடி மக்கள் தலையில் விழும் இந்தக் கடன், தமிழகத்தில் உள்ள 'எளிய மக்களை'த் தாக்குற மாட்டாதா? கடனை வாங்கி ஊதாரி'யாகச் செலவிடும் ஆட்சியாளர், ஆளப்படும் மக்களின் 'தாங்குந்திறனை' அறியாமல் உள்ளனர். இவர்கள், ஊதாரித் தந்தை'யை நினைவுப் படுத்துகின்றார்கள். எல்லாவற்றையும் 'மக்கள்' பொறுமையாகத் தாங்கித் தீர வேண்டுமா என்ன?

4. நடுவணரசைக் கலைக்க ஏன் சட்டம் இல்லை?

"ஏதாவது காரணத்தைக் காட்டி மாநில அரசுகளைக் கலைக்க 356 ஆவது பிரிவு இருப்பது போல, நடுவண் அரசைக் கலைக்க ஏன் அரசியல் சட்டத்தில் ஒரு பிரிவை ஏற்படுத்தக் கூடாது?"

—சட்ட அமைச்சர் சாதிக் பாட்சா (தினமணி 8-4-89) 'மாநிலங்களை', வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை' என்று ஆட்டிப் படைக்க ஒரு நடுவண் அரசுக்கு மக்கள் பேரால் வானளாவிய அதிகாரம், "ஒரு கட்சியின் பெரும்பான்மை"யிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

ஆகவேதான், ஆங்கிலேயர் எழுதிய அரசியல் பட்டயத்தை அடித்துத் திருத்திக் கொண்டிராமல் அதனைப் புதிதாக வடித்துக் கொள்ளக் கூடிய அதிகாரம் மக்களின் முறையான சார்பாளர்களுக்கு வந்தாகல் வேண்டும் என்கின்றனர் அரசியலறிஞர்கள்!

5. அரசியல் தொடர்பற்ற கல்வி!

காந்தி ஊரகப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் (09-04-89) குடியரசுத் துணைத் தலைவர் பர். சங்கர்தயாள் சர்மா பேசும் போது, "கலகம் வளர்வதற்கு அரசியல்காரர்களும் கல்விமுறைக் குறைபாடும் காரணம்" என்று கூறியுள்ளார். இதில் அழுத்தமான அவர் கருத்து, 'கல்விமுறைக் குறைகளே' என்பதாகும்!

'அரசியல்—கல்வி' என்ற இரண்டையும் பிரித்துப் பார்ப்பதால் ஏற்படும் தீய விளைவுகளை ஆட்சியில் உள்ளவர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும். தனித்தனியே, அரசியல்காரர்கள் மீதும். கல்வி முறை மீதும் பழி போடுவது சரியான அணுகுமுறை என்று தோன்றவில்லை.

அரசியல், கல்வியையும் பிறவற்றைப் போலவே தழுவி நிற்பதாகும். அரசியலை வேடிக்கை பார்க்கவும், நாடகம் போலப் பார்த்து வரவுமே, ஆசிரியர், மாணவர், அரசு ஊழியர்க்கு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது

அரசியல் என்பது 'கட்சி அரசியலாக, உள்ளது. கட்சிகள் குறிப்பிட்ட வகுப்புநலஞ் சார்ந்தவையாகவே செயல்பட்டு வருகின்றன. தங்களின் 'கட்சி', ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காகக் கரவான உத்திகளைக் கையாண்டு, போலிமையான சொல்லுறுதிகளைச் சொல்லி மக்களின் எளிய நிலைமையைப் பயன்படுத்தும் அருவருப்பான நிலைமையை மேற்கொள்வதை நாம் காண்கின்றோம்.

"நோய் பரவுகின்றது"! ஆம் அதற்கான அடிப்படை மாற்றம் செய்ய, முதல் நாடி, நோய்

கண்ணிருந்தும் காண மறுப்பவர்கள்!

புலவர். அறிவுடை நம்பி.

சென்ற சில கிழமைகளாக உலகின் கவனத்தை மிகக் கவர்ந்தவர், 'சாத்தானின் கட்டளைகள்' என்ற நூலின் ஆசிரியராவர். அதற்குக் காரணம் அந்த நூலில் குறிப்பிட்ட ஒரு மதத்தாரைப் புண்படுத்தும் படியான சில கருத்துகள் இருப்பதாகக் கூறுவதேயாகும். இதற்காக ஒரு நாட்டின் தலைவர் அந்த நூலாசிரியரைக் கொலை செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்காக, அந்நூலாசிரியரின் தாய் நாடான இங்கிலாந்தின் அரசு, குறிப்பிட்ட நாட்டுடனான தூதரக உறவுகளை முறித்துக் கொண்டது. இன்னும், வணிகம் போன்ற அனைத்து உறவுகளையும் முறித்துக் கொள்வதாகத் தெரிய வருகிறது. தனியொரு மாந்தனுக்காக ஒரு நாட்டின் உறவையே தூக்கியெறிய முன் வந்துள்ளது இங்கிலாந்து அரசு. அவ்வளவு இனப்பற்று! தன் இனத்தைச் சார்ந்த ஒருதனி மாந்தன் மாற்றானால் தாக்கப் பட்டாலும், அது தனது இனத்தையே தாக்கியதாகக் கருதுகிறது, ஆங்கில அரசு. அத்தகைய உணர்வுதான், அது உலகையே கட்டியாளும் வல்லமையைத் தந்தது. சிறிய நாடாக இருந்தாலும், இன்றும் உலகில் முன்னணியில் இருக்கிறது. இவற்றையெல்லாம் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் படிக்கிறார்கள் கேட்கிறார்கள்.

ஆனால். இங்கு நடப்பது என்ன? நமக்கு மிக அண்மையில் உள்ள ஈழத்தில் தமிழின மக்கள் சிங்களக் காடையர்களால் வேட்டையாடியது போதாதென்று, இந்தியக் கொலைப் படையினரால் ஓராண்டுக்கு மேலாகப் பல்லாயிரம் பேர் கொல்லப் பட்டு வருகின்றனர். இந்த நிலைமைகளை நேரில் கண்டு அறிந்து வருவதற்காக, உண்மைத் தமிழனாகிய பாராளுமன்ற மேலவை உறுப்பினர் ஒருவர், எவ்வகைக் கடவுச் சீட்டும் இல்லாமல், அரசின் அனுமதியும் இல்லாமல், தமது உயிரையும் பொருட்படுத்தாமல், ஏற்படும் இடர்ப்பாடுகளையும், சிக்கல்களையும் பொருட்படுத்தாது, இன உணர்வு உந்தித் தள்ள, கமுக்கமான முறையில் ஈழம் சென்று, ஈழச் சிக்கலின் உண்மைகளை உணர்ந்து திரும்பியுள்ளார். இதற்கு முன்னர், இதே போன்று மாவீரன் நெடுமாறன் அவர்களும் ஈழம் சென்று பல செய்திகளை அறிந்து வந்தார். இவ்வளவு மனவுறுதியோடு மேற்கொண்ட இம்முயற்சிகள் எவ்வளவு பாராட்டப் பட வேண்டிய முயற்சிகள். ஆனால், இவர்கள் என்னவோ. பெரிய மாபெரும் குற்றத்தைச் செய்தது போல் பேசப் படுகிறார்கள்.

அடுத்து, ஓர் அரை நூற்றாண்டிற்கும் மேலாகப் பெரியார், பட்டிதொட்டியெல்லாம் சென்று, சாதிக் கொடுமைகளையும், தீண்டாமைத் தீமைகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறி விழிப்புணர்வை உண்டாக்கியதோடு சாதியாகிய கோட்டையின் அடிப்படையைத் தகர்த்து ஆட்டங் காண வைத்திருந்தார். அப்பெரியவருடைய அவ்வளவு உழைப்பும், அண்மைக் காலமாக வீணாகி அழிந்து வருவதை நாம் காண்கின்றோம். யாரோ சிலர், தொடங்கிய சாதிச் சண்டையானது, இன்று ஒவ்வொரு நாளும் புதுப்புதுச் சாதிகள் தோன்றிக் கொண்டும் ஒவ்வொரு சாதியிலும் ஒரு சிலர் தாங்கள் தாம் அச்சாதி மக்களை அனைத்துத் துறைகளிலும், வளப்படுத்தவும், வலுப்படுத்தவும் பிறவி

(முன் பக்கத் தொடர்ச்சி)

அது தணிக்கும் வாய்ப்பறியாது— அறிந்தும், முயலாது உள்ள தந்நலக்காரர்களை இனம் கண்டு கொள்ளுதல் வேண்டும்! அதற்கான ஈகவுணர்வு பெறுதல் வேண்டும்!

6. சட்டமன்ற நேரம் வீணாகவேண்டாம்!

கட்சி அரசியல் என்று வந்து விட்ட பிறகு, 'பிறகட்சிகள்' மீது ஆளுங்கட்சி எதுவும் பிரிவு காட்டுமென்று நினைக்க முடியாது!

ஆகவே, திட்டவட்டமான மக்கள் நலன் சார்ந்து செயல்பட மக்களைப் பயிற்றுவிக்கும் அரசியல் முறையை நாம் பெறுதல் வேண்டும்.

கல்வி அமைச்சர் க. அன்பழகம் பேசும்போது, திருநாவுக்கரசு,
"புதிய பள்ளிகள் தொடங்க ஒப்புதல் தரும்போது கட்சிக் கண்ணோட்டமின்றி எதிர்க்கட்சி உறுப்பினர் தொகுதிகளுக்கும் ஒப்புதல் வழங்கப்படுதல் வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

இதற்கு "முந்தைய அரசின் நடைமுறைகளை இந்த அரசு பின்பற்றும்" என்று கல்வி அமைச்சர் மறுமொழி தந்துள்ளார். (தினமணி, 10-04-89)

'முந்தைய அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் புறக்கணித்தது; இல்லை. புறக்கணிக்கவில்லை' என்று திட்டவட்டமான மறுமொழி கூறாமல் கூறியிருப்பது 'மடக்கிப் பேச' உதவலாம்? உண்மையில் முந்தைய அரசை நேருக்கு நேர் குற்றஞ் சாட்டியிருக்கலாம். அல்லது பாராட்டியும் இருக்கலாம்!

இதற்கெல்லாம் மேலாக 'எங்களுக்குக் கட்சிக் கண்ணோட்டமில்லை; மக்கள் நலனே எங்கள் நோக்கம்' என்று தெளிவு படுத்தியிருக்கலாம்!

சட்டமன்றத்தில், 'அரட்டை' குறையவும். மக்களுக்குச் சொல்ல வேண்டிய, செய்திகளை விட்டு விடாமல் கூறவும் நேரத்தைக் கையாளுதல் நல்லதென்று சொல்லவும் வேண்டுமோ? 0

எடுத்திருப்பதாகக் கூறிக் கொண்டு, சாதிச் சண்டைகளை வளர்த்து இனத்தை வலுக்குறைத்து வருவதைக் காண்கிறோம். தமிழனுடைய வரலாறே வந்தேறிகளால் இனம் கூறு போடப்பட்டு அதில் அவர்கள் வயிறு வளர்த்த கதைதான்! இவற்றை அறிந்திருந்தும் மக்களின் அறியாமையையும் தந்நலத்தையும் பயன்படுத்தித் தமிழனே அவ் வேலையைச் செய்கிறான். அக் கொடுமையை இன்று காண்கிறோம்.

இவ்வளவு அடாவடித்தனங்கள் எதற்காக? அரசு வேலை வாய்ப்புகளில் தங்கள் சாதியாருக்கு இடம் பிடிக்கலாம்! அப்படி இந்த அரசில் எத்தனை வேலை வாய்ப்புகள் கிடைத்து விடும்? இம்மாதிரியான எளிய செயலுக்கு இவ்வளவு போராட்டம் நடத்தும் பெரிய மாந்தர்கள், தமிழ் நாட்டில் உள்ள பெரிய, முகாமையான வணிக நிலையங்கள் உள்ள நகரங்கள் எல்லாம் சிறிது, சிறிதாகத் தமிழன் கையை விட்டுப் போய்க் கொண்டிருக்கின்றனவே! அதை அறிவார்களா? அவையெல்லாம் ஏதோ ஒரு சாதிக்குரியவைதாமா? இத்தமிழ்நாட்டிலிருந்து எத்தனை ஆயிரம் கோடி உருபா ஒராண்டில் வட்டியாக மட்டும், மார்வாடிகளுக்கும், சேட்டன்களுக்கும் போகிறது? இவையெல்லாம் ஒரு சாதியான் பணமா? இங்குள்ள பெரிய ஆலைகள், வணிக நிலையங்கள் யாருடையவை? அவற்றின் மூலம் எவ்வளவு பொருள் ஊதியமாகப் பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற வடமாநிலங்களுக்கும், நகரங்களுக்கும் போகிறது? இதே நிலை நீடித்தால், இத் தமிழ் மண்ணே தமிழனுக்கு உரிமை இல்லாமல் ஆகிவிடும் போல் இருக்கிறது. சாதிக்காகப் போராடும், புனிதத் தோன்றல்களுக்கு இவையெல்லாம் புரியவில்லையா? அறியாமல் ஆட்டங்கட்டுகிறார்களா?

டெல்லி அரசே, வானொலி, தொலைக் காட்சிகள் மூலம் தமிழனுடைய மூளையை எவ்வளவு மழுங்கடிக்கவேண்டுமோ, அவ்வளவும் அணுவும் தவறாமல் செய்கிறது. அது போக, விளையாட்டு, விழா, வேடிக்கை, திரைப்படத் தில்லு முல்லுகள் வேறு. இந்த உண்மைகளை மக்களுக்கு உணர்த்தி, ஒட்டு மொத்தமான தமிழர்களின் உண்மையான முன்னேற்றத்திற்குப் பாடு படுவதை விட்டு விட்டு மிக இழிவுத்தனமான சாதிவெறிகளைத் தூண்டி விட்டுக் கொஞ்சநஞ்ச முன்னேற்றத்தையும் பாழ்படுத்தி வருகிறார்களே, இவர்களை என்ன செய்வது? யார் கேட்பது? இவ்வாறு சாதி வெறியால் நலங்கான நினைப்போர் தற்குறிகளா? உலகியல் அறியாதவர்களா? வரலாறு புரியாதவர்களாக சிறுசிறு நலன்களுக்காக இங்குள்ளோர் ஒருவரோடொருவர் பெரும் போராட்டம் நடத்துகிறார்களே! பிறசாதியார்களை வேறாகக் கருதும் இவர்கள், பிற இனத்தவர்கள் இங்கு வந்து கோடி கோடியாகக் கொள்ளையடித்துப் போகிறார்களே, அவர்களெல்லாம் இந்தச் சாதிக் குருடுகளுக்குத் தெரியவில்லையா? அல்லது காண மறுக்கிறார்களா? அல்லது கண்டும் காணாத மாதிரி நடிக்கிறார்களா? அவ்வாறு செய்வதால் யாருக்கு எவ்வளவு ஊதியம்? அல்லது இழப்பு என்பதை உணர்ந்தார்களா? இவர்கள் எல்லாம் உள்புழுங்கும் சாதி நோயால் இத்தமிழினம் அழிய வேண்டும் என்று உறுதி பூண்டு உள்ளனரா? அறிஞர்கள் கூட இதை அறிந்ததாகக் காட்டிக் கொள்ள மறுக்கிறார்களே. சிலர் அதை எதிர்த்தாலும் பெரும்பான்மை காரணியமாக அவ்வெதிர்ப்புப் புறக்கணிக்கப் படுகிறது. இந்நிலை திருந்த வேறு வழிதான் என்ன?

ஏழை, எளியவர் தம் நிலைகளை உணர்ந்து விழிப்படையாமல் இருக்கக் கள்ளச் சாராயம் தடுக்கிறது. இளைஞர்கள் விழிப்படைந்து சிந்தனை பெற்று, மொழி, இனம், பொருளியல் வேறுபாடுகள் ஆகியன பற்றியெல்லாம் ஆய்ந்து விடாமல் தடுக்க, விளையாட்டு, விழா வேடிக்கை, குழு-வோட்டம், வானொலி, தொலைக்காட்சி போன்ற குறும்புத்தனங்கள் செயல் படுகின்றன. அறிஞர்கள் பொதுவான நலன்களை மறக்க, பதவி நலன்கள், பட்டங்கள் காரணமாக இருக்கின்றன. அரசு அலுவலர்களோ, எவ்வகையில் எவ்வளவு சுருட்டலாம் என்று ஆய்வதிலும் செய்வதிலுமே கவனத்தைத் திருப்பி விடுகிறார்கள்.

அதற்கு அதிகம் ஏந்து இல்லாதவர்கள் போராட்டம்! நாளெல்லாம் போராட்டம்! அரசியல் காரர்களைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். பதவி வேட்டையில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள், இவற்றையெல்லாம் மீறிச் சாதிப் பிளவுகள்! இனி, இவற்றையெல்லாம் கடந்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்றவர்கள் 'இனம், இனம், மொழி, மொழி, தமிழர் நலன்', நலன் என்று என்னதான் கூக்குரல் எழுப்பினாலும், எவ்வளவு உரக்கக் கூவினாலும், மிகக் கடுமையாக எழுதினாலும் யாரும் காதில் போட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. மேற்கூறிய ஏந்துகள் எல்லாம் மற்றானுக்கு, இந்தி வல்லாளுமை அரசிற்கு, வணிகமோ, கொள்ளைக் கும்பல்களுக்கு மிகச் சாய்கால்களாய் அமைந்துள்ளன. இவ்வளவெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கு என்ன தீர்வு என்ற சிந்தனைகள் எல்லாம் யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறாக இனத்தை அரிக்கின்ற, கூறு போடுகின்ற, இழிவு செய்கின்ற, மொழியை நசுக்குகின்ற, வளர்ச்சியைக் கெடுக்கின்ற எத்தனையோ இழவுகள் இங்கு நடைபெறுகின்றன, நாளும்! அவற்றைப் பற்றியெல்லாம் எங்கோ ஒரு சிலரைத் தவிர வேறு யாரும் கண்டு கொள்வதாகவே தெரிய

Scanned with CamScanner

சில செயல்களைக் கூடச் சிலரால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. இதற்குச் சில இதழ்களும் துணை செய்கின்றன. திருவாரூர் தேர் ஓடவில்லை. இ'து ஒரு பெரிய இழப்பு; இரண்டு காலோடும், நான்கு கைகளோடும் எங்கோ ஒரு சிலை மண்ணில் புதைந்து கிடந்தது. அது யாரோ எதற்கோ குழி பறிக்கும் போது தெரிய வந்தது. இ'து ஒரு பெரிய செய்தி. மக்கள் திரண்டு வந்து அதற்கு வழி பாடு நடத்தினர். இதைப் படித்து விட்டு மிக வியப்புடன் அதைப் பற்றிப் பேசிக் கொள்வோர் ஏராளம்! அதைப் பெரிது படுத்தி வெளியிடும் செய்தித் தாள்கள் பல! ஆனால், தமிழுக்கு, தமிழினத்திற்குப் பொதுவாக ஏற்படும் இழப்புகளை-இழிவுகளைப் பொறுக்காமல் போராடப் புறப்படுவோர் எத்தனைப் பேர் உள்ளனர்? அதைக் கண்டும், காண தவர்களாக இருப்போர் எத்தனைப் பேர்?

எனவே, இவ்வாறு கண்டும் காணுமல் இருப்போர்களைச் சாதி வெறியூட்டி, அதனல் புகழ் பெற எண்ணுபவர்களைப் பதவிக்காக, பொருளுக்காக இனத்தையே விலை பேசத் துணியும் இழி மக்களை, மொழி, இனப் பற்றே இல்லாத மூடங்களை, பதவி நலன் கருதி எவன், அல்லது எவன் பின்னாலோவெல்லாம் திரியும் இழி பிறவிகளை - பொருளுக்கே வாழ்க்கை என்று வாழ்கின்ற கீழ்மைகளை, உயர்பொறுப்பில் உள்ளவர்கள் அதை மீண்டும் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பிறர்காலையும் பிடிக்கின்ற கழிசடைகளை, தமிழ் மண்ணே! இன்னும் எவ்வளவு காலந்தான் தாங்கிக் கொண்டிருக்கப் போகிருய்? ஓ! தமிழ்த் தாய்மார்களே! மேற்கூறிய மாக்களையே, இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் பெற்றுப் பெற்று, இம் மண்ணில் போட்டு, மாசு படுத்தப் போகிறீர்கள்? தன்மானமிழந்து, தனிப்பெருமையிழந்து வாழ்வதும் வாழ்வாகக் கருதுகிறீர்களா? தமிழுணர்வுடைய சான்றேரே! கண்டும் காணுமல் அல்லது காண மறுக்காமல் கண்டு, ஆய்ந்து முடிவிற்கு வாருங்கள்! 0

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடிய அரசை நடத்துகிருரா என்று மக்கள்தாம் தீர்மானிக்க வேண்டும்.

''ஒவ்வொரு முறையும் தென்பகுதியில் எதிர்க் கட்சிகளால் தேர்தல் வழிஏற்படுத்தும மாநில அரசுகளை நடுவணரசு பதவி நீக்கம் செய்வது மருமமாக உள்ளது'' என்கிருர் அனைத்து இந்திய சனதா தளத் தலைவர் வி. பி. சிங். இதில் மருமம் எதுவுமில்லை. தென்னிந்தியத் திராவிடக் கட்சிகள் ஆட்சியில் அமரக் கூடாதென்பதே இராசீவின் கொள்கையாக இருப்பது தெரிகிறது.

அவ்வாருனல் கலைஞர் ஆளும் தமிழ்நாட்டு அரசும் கலைக்கப் படுமா? படலாம். இவருக்குத் தான் முதல் குறி வைக்கப் பெற்று, சூழ்ச்சி அம்பு தொடுக்கப் பெற்றது. ஆனல் அது பொம்மை தலையை உருட்டித் தள்ளியுள்ளது. இனி பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் கலைஞர்க்கும் சட்டமன்றக் கலைப்பு அம்பு தொடுக்கப் படும் என்று தில்லியில் பலரும் பேசி வருவதாகத் தெரிகிறது. பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும். 0

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 37

..ண்மை, நேர்மை, விடாமுயற்சி, ஊக்கம், ..முக்கம் - இந்த ஐந்து உணர்வுகளும் மாரு ..ருப்பவனே சரியான மக்கள் தொண்டன்!

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 120;

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண். 847829;

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5;

TN/MS (C) 657